## 28

# சீனாய் மலை மற்றும் சீயோன் மலை

## (12:18-29)

எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் "மாபெரும் உச்சக்காட்சி" என்று அழைக்கப்பட்டுள்ள வசனப் பகுதியை நாம் வந்து அடைந்திருக்கிறோம்:[1] இது சீனாய் மலையையும் சீயோன் மலையையும் நேரெதிராக ஒப்பிடுகிறது. இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்பட்ட சில அணுகுமுறைகள் விவாதங்கள் மற்றும் புத்திகூறுதல்கள் ஆகியவற்றை மீண்டும், 12:18-29, வசனப்பகுதியில் நாம் காணுகிறோம். எடுத்துக்காட்டாக எபிரெயருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் பழைய ஏற்பாட்டை எழுத்தாளர் தொடர்ந்து பயன்படுத்தினார். நமது தற்போதைய வசனப்பகுதி - ஆதியாகமம், யாத்திராகமம், உபாகமம் மற்றும் ஆகாய் தீர்க்கதரிசனம் ஆகிய புத்தகங்களில் இருந்து பழைய ஏற்பாட்டு வரலாறு, பழைய ஏற்பாட்டு சொற்றொடராக்கம் மற்றும் பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. நாம் "தேவனே மேற்கோள் காண்பிக்கும்போது அந்த வேதவசனங்களில் விசேஷித்த கவனம் செலுத்த வேண்டும்!" என்று சார்லஸ் ஹோட்ஜ் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[2]

புதிய உடன்படிக்கையின் ஒவ்வொரு விஷயமும் *மேன்மையானதாக* உள்ளது என்ற உறுதிப்பாடு, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் இன்னொரு சித்தரிப்பாக இருக்கிறது. 12:24ல் நாம், "புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு"வைப் பற்றியும் "ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் *நன்மையானவைகளைப்* பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தை" பற்றியும் வாசிக்கிறோம் (என்னால் வலியுறுத்தப் படுகிறது). இயேசு ஒரு மேன்மையான மத்தியஸ்தராக இருக்கிறார் மற்றும் அவரது இரத்தம் ஒரு மேன்மையான பலியாக இருக்கிறது என்பது மறைகருத்தாக உள்ளது. பழைய உடன்படிக்கையின் இரத்தம் (மிருகங்களின் இரத்தம்) மக்களை "பூரணப்படுத்த" முடியாதிருந்தது ஆனால் புதிய உடன்படிக்கையின் இரத்தம் (இயேசுவின் இரத்தம்) அதைச் செய்ய முடிகிறது (வசனம் 23).

நாம் ஒரு *மேன்மையான உடன்படிக்கையைக்* கொண்டுள்ளோம் என்பது நிருபத்தின் இப்பகுதியினுடைய முதன்மை வலியுறுத்தமாக உள்ளது. சீனாய் மலை என்பது பழைய உடன்படிக்கையின் உருவகமாக உள்ளது. அதே வேளையில் சீயோன் மலை என்பது புதிய உடன்படிக்கையின் உருவகமாக உள்ளது. இந்தப் பாடத்தில் நாம், இந்த இரு மலைகளுக்கும் இடையில் உள்ள வேறுபடும் ஒப்பீடுகள் சிலவற்றைக் கவனிப்போம். பின்பு நாம் இவ்வசனப்

*பகுதியின் முடிவில் உள்ளடக்கப் பட்டிருக்கும் அறைகூவல்களைக் காண்போம்.*

## வேறுபடும் ஒப்பீடுகள் (12:18-19)

*எழுத்தாளர், தமது வாசகர்கள் "சீனாய் மலையினிடத்திற்கு" (வசனம் 18) வந்திருக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக "சீயோன் மலையினிடத்திற்கு" (வசனம் 22) வந்திருந்தனர் என்று வலியுறுத்தினார். இது மாறுதலின் செயல் முறையாகக் குறிப்பிடுவதற்கான உருவகநடை வழியாக உள்ளது. "சீயோன் மலையினிடத்திற்கு வருதல்" என்பது வாசகர்கள் கிறிஸ்தவர்களாகி இருப்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது.*

***சீனாய் மலை***

*தோற்றகால வாசகர்கள் யூதத்துவத்திற்குத் திரும்புதல் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தனர். யூதர்களுக்கு, அவர்களின் மக்களின் வரலாற்றில், சீனாய் மலையின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நிகழ்வைக் காட்டிலும் அதிகம் தனிச்சிறந்ததும் மன எழுச்சியூட்டுவதுமான நிகழ்வு வேறு எதுவும் இருக்கவில்லை. 18 முதல் 21 வரையுள்ள வசனங்கள், பயத்தை ஏவும் அந்த நிகழ்வை மனதிற்குக் கொண்டு வந்தது (காண்க யாத்திராகமம் 19; 20:19; உபாகமம் 4:11, 12; 5:23; 9:19). அந்த நிகழ்வைப் பண்புபடுத்தும் சொற்றொடர்கள் யாவை?*

*(1) <u>மாம்சப்பிரகாரமானது/பூமிக்குரியது</u>. சீனாய் மலை என்பது இயற்பியல் ரீதியான ஒரு மலையாக இருந்தது, இது "தொடக்கூடிய" ஒரு சிகரமாக இருந்தது (வசனம் 18; காண்க வசனம் 20). மோசே மக்களை எச்சரித்தபோது அவர் "பூமியின்மேல்" இருந்தார் (வசனம் 25).*

*(2) <u>அணுக முடியாதது</u>. அந்த மலை தொடக்கூடியதாக இருந்தது, ஆனால் அந்த வேளையில் அது தொடப்படக் கூடியதாக <u>இருக்கவில்லை</u> (வசனம் 20). மக்கள் அந்த மலையினிடத்திற்கு "வந்தனர்" ஆனால் அதை மிகவும் நெருங்கி வரவில்லை! அதை நெருங்கி வருதல் என்பது மரணம் அடைதலாக இருந்தது!*

*(3) <u>பயத்தை - உண்டுபண்ணுவது</u>. வல்லமையின் பயங்கரமான காட்சிப் படுத்துதலைக் கண்ணோக்குங்கள் (வசனங்கள் 18, 19, 21). பயமடைந்த பார்வையாளர்களைக் கவனியுங்கள் (வசனங்கள் 19, 20). மோசேயேகூட, "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன்" என்று கூறினார் (வசனம் 21ஆ).*

*(4) <u>தற்காலிகமானது</u>. அந்த வேளையில் கர்த்தரின் குரல் பூமியை அசையச் செய்தது (வசனம் 26). எபிரெயருக்கு நிருபத்தை எழுதிய வேளையில், அவரது குரல் (செயல்விளைவில்) <u>ஒவ்வொன்றையும்</u> அசையச் செய்தது (வசனம் 26); மாம்சத்திற்குரிய அல்லது பூமிக்குரிய விஷயங்கள் (குறிப்பாக, யூதர்களுக்கு மதிப்பு மிக்கவையாக இருந்த நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகள்) நீக்கப்படும் செயல்முறையில் இருந்தன.*

*சீனாய் மலையின் (பழைய உடன்படிக்கையின்) பண்புகளை மீண்டும் கண்ணோக்குங்கள். எபிரெயக் கிறிஸ்தவர்கள் இவ்வகையான உடன்படிக்கையினிடத்திற்கு "வந்தி<u>ருக்கவில்லை</u>" என்று இவ்வசனப் பகுதி வலியுறுத்துகிறது. அது அவர்களின் உடன்பாடுகள் இருக்க வேண்டிய இடமல்ல.*

***சீயோன் மலை***[3]

*சீயோன் மலையை நாம் எவ்வாறு விவரிக்கலாம்? சீனாய் மலைக்கு நெரெதிரான வகையில், சீயோன் மலையானது பின்வரும் சொற்றொடர்களால் பண்புபடுத்தப்பட முடியும்:*

*(1)ஆவிக்குரியது/பரலோகத்திற்குரியது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், "நகரத்திற்கு வந்திருக்கிறோம்" (வசனம் 22). அது என்ன நகரம்? "தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரம்" (11:10). நாம் "பரம எருசலேமினிடத்திற்கு" வந்திருக்கிறோம் (12:22; என்னால் வலியுறுத்தப் படுகிறது). கர்த்தருடைய சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில், நமது பெயர்கள் "பரலோகத்தில் எழுதப் பட்டுள்ளன" (வசனம் 23).*

*(2) அணுகக்கூடியது. நாம் "தேவனிடத்திற்கும் ... இயேசுவினிடத் திற்கும்" வந்திருக்கிறோம் (வசனங்கள் 23, 24). மரித்த நீதிமான்களின் ஆவிகள் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கின்றன (வசனம் 23). நாம் தொடர்ந்து தேவனுக்கு மிக உயர்ந்த மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது உண்மையே (வசனங்கள் 28, 29), ஆனால் புதிய உடன்படிக்கையானது அவரிடத்தில் "நெருங்கிச் சேரும்படி" நம்மை ஊக்கப் படுத்துகிறது (யாக்கோபு 4:8; காண்க எபிரெயர் 7:19).*

*(3) தைரியத்தை ஏவுகிறது. அதிர்ந்து, குலுங்கி, புகையும் மலையினிடத்திற்கு வருவதற்குப் பதிலாக நாம், 12:22-24ல் விவரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயத்தினிடத்திற்கும் வந்திருக்கிறோம்:*

> *நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.*

*"எவ்வளவு பயங்கரம்!" என்று கதறுவதற்குப் பதிலாக நாம், "எவ்வளவு ஆச்சரியம்!" என்று ஆர்ப்பரிக்க முடியும்.*

*(4) நித்தியமானது/நிரந்தரமானது. "அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்" (வசனம் 28அ). இது இராஜ்யம்/சபை என்பதற்குத் தகுதியான மொழிநடையாக உள்ளது (காண்க தானியேல் 2:44). "பாதாளத்தின் வாசல்கள்" அதை அழிக்க முடியாது (மத்தேயு 16:18). சந்தர்ப்பப் பொருளில் இந்தச் சொற்றொடராக்கம், பரலோகத்தில் உள்ள நித்திய இராஜ்யத்திற்கான திட்டவட்டமான குறிப்பை ஏற்படுத்துவதாக இருக்கலாம்! (எபிரெயக் கிறிஸ்தவர்கள் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர் என்ற உண்மையில், கூடுதல் மறைகருத்து ஒன்று காணப்படலாம். அவர்கள் தங்கள் விசுவாசத்தில் அசைக்கப்படாதவர்களாகவும் இயேசுவினிடத்தில் கொண்டிருந்த*

*தங்கள் உடன்படிக்கையில் இருந்து புறம்பே செல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்!)*

*சீயோன் மலையின் பண்புகளைத் திரும்பவும் கண்ணோக்குங்கள். "நீங்கள் இதினிடத்தில் வந்திருக்கிறீர்கள்" என்று வாசகர்களுக்குக் கூறப்பட்டது. இங்குதான் தேவனுடைய ஆசீர்வாதங்கள் உள்ளன! இங்குதான் அவர்களின் உடன்பாடு - மற்றும் நமது உடன்பாடு - இருக்க வேண்டும்!*

## அறைகூவல்கள் (12:24, 25, 28, 29)

*சீயோன் மலையானது சீனாய் மலையைவிட மேன்மையானதாக இருந்தது. ஆகையால் புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையைவிட மேன்மையானதாக இருந்தது, மற்றும் கிறிஸ்தவமானது யூதத்துவத்தைவிட மேன்மையானதாக இருந்தது. ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட எழுத்தாளர், தமது வாசகர்களுக்கு, அந்த முடிவுகளின் அடிப்படையில் அமைந்த புத்திமதிகளைக் கொடுத்து, அவர்களுக்கு அறைகூவல் விடுக்கத் தயாரானர்.*

### அவரைக் கவனித்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள் (12:24, 25, 29)

*நாம் பரலோகத்தில் இருந்து பேசியவரைக் கவனிக்கத் தவறியபோது மற்றும் அவர் கட்டளையிட்டவற்றைச் செய்யத் தவறியபோது, "பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகுகிறோம்"[4] (வசனம் 25). மோசே (சிறியவர்) கூறியவற்றைக் கவனித்து அவற்றிற்குக் கீழ்ப்படியத் தவறியவர்கள் தண்டிக்கப்பட்டனர். கர்த்தர் (பெரியவர்) கூறியவற்றைக் கவனித்து அவற்றிற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு மிகப்பெரிய தண்டனை செயல்படுத்தப்படும்! "புதிய உடன்படிக்கை" (வசனம் 24) தேவனிடத்தில் இருந்து வந்தது. அதை நாம் புறக்கணித்தால், நாம் "பட்சிக்கிற அக்கினியாக" உள்ள தேவனுடைய கோபத்தை வரவழைத்துக் கொள்கிறோம் (வசனம் 29)!*

### அவருக்கு நன்றி செலுத்துங்கள் மற்றும் அவரை ஆராதியுங்கள் (12:28)

*தேவன் (நமக்கு அசைவில்லாத இராஜ்யத்தைக் கொடுத்தது உட்பட) நமக்குச் செய்துள்ள யாவற்றையும் நாம் நினைக்கையில், நாம் நன்றியுணர்வினால் நிரப்பப் பட்டிருக்க வேண்டும். இது நன்றி நிறைந்த ஆராதனையில், "பயம் மற்றும் பக்தி" ஆகியவற்றினால் பண்புபடுத்தப்பட்ட ஆராதனையில் வெளிப்படுத்தப் பட வேண்டும் (வசனம் 28).*

## போதகருக்குக் குறிப்புகள்

*சீனாய் மலை மற்றும் சீயோன் மலை ஆகியவற்றை ஒப்பிடும் எளிய வரைவட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. நீங்கள் இதை ஒரு கரும்பலகையில் அல்லது எளிய தாள் அல்லது அட்டை ஒன்றில் பிரதியாக வரைந்து, இந்தப் பாடத்தைப் போதிக்கையில் பயன்படுத்தலாம்.*

| சீனாய் மலை | சீயோன் மலை |
|---|---|
| மாம்சத்திற்குரியது/பூமிக்குரியது | ஆவிக்குரியது/பரலோகத்திற்குரியது |
| அணுக முடியாதது | அணுகக்கூடியது |
| பயத்தை உண்டாக்குவது | தைரியத்தை ஏவுவது |
| தற்காலிகமானது | நித்தியமானது/நிரந்தரமானது |

குறிப்புகள்

[1]Neil R. Lightfoot, ACU extension class on Hebrews taught in Fort Worth, Texas, 26 October 1985. [2]Charles B. Hodge, Jr., *The Agony & Glory of the Cross* (Searcy, Ark.: Truth for Today World Mission School, 2007), 134. [3]*"சீயோன் மலை" அல்லது "சீயோன்" என்பது எருசலேம் நகருக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு பெயராக இருந்தது (காண்க 1 இராஜாக்கள் 8:1; 2 நாளாகமம் 5:2), இது இங்கு உருவகநடையில் பயன்படுத்தப் படுகிறது.* [4]இது தேவனைக் குறிக்கிறது, ஆனால் நமது வசனப்பகுதியின் நிறைவு வசனங்கள், பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய தேவனுக்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை.